அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.187/2015

தேதி.09.08.2015

# சமத்துவ மக்கள் கட்சியின் முதல்கட்ட ஒன்றியச் செயலாளர்கள் கூட்டம் ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் முதல்கட்ட ஒன்றியச் செயலாளர்களின் கூட்டம் சென்னை தலைமை அலுவலகத்தில் உள்ள மகாகவி பாரதியார் அரங்கில் இன்று ( 09.08.2015 ) காலை 10.00 மணிக்கு தொடங்கி மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. கூட்டத்திற்கு சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்கு கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களின் ஒன்றியச் செயலாளர்கள் கலந்து கொண்டு கட்சி வளர்ச்சி, உறுப்பினர் சேர்க்கை பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. பொதுச்செயலாளர் கரு.நகராஜன், பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், கொள்கைபரப்பு செயலாளர் ஆர்.ஜெயப்ரகாஷ், நிதி ஆலோசகர் டாக்டர்.ராஜசேகர், இளைஞரணிச் செயலாளர் சி.வி.சாம் மேத்யூ, தென்மண்டலச் செயலாளர் என்.சுந்தர், மகளிரணி துணைச் செயலாளர்கள் திருமதி. ம.ரா.ஜெமிலா, திருமதி எம்.பாகீரதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதேபோல் நாளை ஆகஸ்ட் 10 ஆம் தேதி திங்கட்கிழமை விழுப்புரம், நாகை, கடலூர், தஞ்சை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர், திருவாரூர் மாவட்டங்களின் ஒன்றியச் செயலாளர்களும், நாளை மறுநாள் ஆகஸ்ட் 11 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை கோவை, நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களின் ஒன்றியச் செயலாளர்களின் கூட்டமும் நடைபெற இருக்கிறது.

நன்றி,வணக்கம்,

கரு.நாகராஜன்,

பொதுச்செயலாளர்.

புகைப்படம் அனுப்பப்பட்டுள்ளது.